## (இ) விலைவாசிகளும், கூலிகளும்

கொழும்புத் தொழிலாளர் வர்க்க குடும்பங்களின் வரவு செலவு சம்பந்தமாக, குடிசன மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தாற் கணிக்கப்பட்ட நுகர்வோர் விலைக்குறிகாட்டி, வாழ்க்கைச் செலவில் ஏற்பட்ட மாற்றங்களை அளவிடுவதற்கு உபயோகிக்கப்பட்டுள்ளது. இக்குறிகாட்டியில் உட்படும் பொருட்களின் அளவுப்பிரமாணங்கள், 1953ம் ஆண்டின் VI-வது பருவப்பத்திரத்தின் சிபார்சுகளை ஆதாரமாகக் கொண்டவையாகும். பின் வரும் அட்டவணை, கடந்த மூன்று வருடகாலத்தில் இந்நுகர்வோர் விலைக் குறிகாட்டியில் ஏற்பட்ட மாற்றங்களைப் பொருட்களின்படியும், துறைகளின் படியும் பிரித்துக் காட்டுகின்றது.

### அட்டவணை II இ-1
### கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டி
### (1952=100)

| வருடம் | சகல விடயங்களும் | பொருட்களின்படி: உணவு (61·9%) | உடை (9·4%) | எரி பொருள் விளக்கு (4·3%) | வாடகை (5·7%) | ஏனைய (18·7%) | துறைகளின்படி: உள் நாட்டுத் தொகுதி (51%) | இறக்கு மதித் தொகுதி (44%) | ஏற்று மதித் தொகுதி (5%) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1961 | 104·8 | 99·8 | 103·9 | 104·4 | 101·5 | 122·8 | 112·3 | 94·6 | 119·1 |
| 1962 | 106·3 | 100·9 | 108·2 | 105·6 | 101·5 | 124·9 | 113·9 | 96·7 | 113·8 |
| 1963 | 108·8 | 103·0 | 118·2 | 103·0 | 101·5 | 126·6 | 113·4 | 102·5 | 117·7 |

மூலங்கள்: குடிசன மதிப்பு புள்ளி விபரத்திணைக்களம், இலங்கை மகா வங்கி.
ஓடைப்பிரிவுகளின் தலையில் உள்ள எண்தொகைகள், அளவுப்பிரமாணங்களைக் குறிப்பனவாகும்.

ஒவ்வொரு மாதத்திலும் ஏற்பட்ட மாற்றங்கள் பின்வருமாறு:—

### அட்டவணை II இ-2
### கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டியில் ஏற்பட்ட மாற்றங்கள்
### (1952=100)

| மாதம் | சகல விடயங்களும் 1962 | 1963 | மாற்றம் % | இறக்குமதித் தொகுதி 1962 | 1963 | மாற்றம் % | உள்நாட்டுத் தொகுதி 1962 | 1963 | மாற்றம் % | ஏற்றுமதித் தொகுதி 1962 | 1963 | மாற்றம் % |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தை .. | 105·5 | 107·1 | +1·5 | 95·3 | 98·7 | +3·6 | 113·7 | 112·4 | –1·1 | 113·2 | 128·7 | +13·7 |
| மாசி .. | 105·9 | 107·8 | +1·8 | 95·6 | 100·5 | +5·1 | 113·7 | 112·5 | –1·1 | 113·6 | 126·2 | +11·1 |
| பங்குனி .. | 106·2 | 108·0 | +1·7 | 97·5 | 101·8 | +4·4 | 113·0 | 112·0 | –0·9 | 114·7 | 123·9 | + 8·0 |
| சித்திரை .. | 106·3 | 109·1 | +2·6 | 97·1 | 103·7 | +6·8 | 113·5 | 112·6 | –0·8 | 113·8 | 122·6 | + 7·7 |
| வைகாசி .. | 106·5 | 109·1 | +2·4 | 97·6 | 103·3 | +5·8 | 113·4 | 113·3 | –0·1 | 114·6 | 118·1 | + 3·1 |
| ஆனி .. | 106·6 | 109·2 | +2·4 | 95·8 | 103·3 | +7·8 | 115·2 | 113·9 | –1·1 | 113·7 | 113·9 | + 0·2 |
| ஆடி .. | 106·4 | 109·3 | +2·7 | 96·7 | 104·8 | +8·4 | 114·3 | 112·8 | –1·3 | 112·1 | 113·1 | + 0·9 |
| ஆவணி .. | 106·2 | 108·4 | +2·1 | 97·6 | 104·3 | +6·9 | 113·2 | 111·8 | –1·2 | 111·3 | 111·4 | + 0·1 |
| புரட்டாதி .. | 106·2 | 108·0 | +1·7 | 97·1 | 103·3 | +6·4 | 113·3 | 111·6 | –1·5 | 112·0 | 112·1 | + 0·1 |
| ஐப்பசி .. | 106·5 | 109·2 | +2·5 | 96·4 | 102·2 | +6·0 | 114·5 | 114·7 | +0·2 | 113·6 | 114·2 | + 0·5 |
| கார்த்திகை .. | 107·2 | 109·8 | +2·4 | 96·6 | 102·1 | +5·7 | 115·7 | 116·0 | +0·3 | 114·7 | 113·4 | – 1·1 |
| மார்கழி .. | 106·4 | 110·3 | +3·7 | 97·2 | 101·9 | +4·8 | 113·3 | 117·1 | +3·4 | 118·0 | 115·0 | – 2·5 |
| சராசரி .. | 106·3 | 108·8 | +2·4 | 96·7 | 102·5 | +6·0 | 113·9 | 113·4 | –0·4 | 113·8 | 117·7 | + 3·4 |

மூலங்கள்: குடிசனமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை மகா வங்கி.

கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டியின்படி கணிக்கப்பட்ட சில்லறை விலைகளின் மட்டம், 1962ல் இருந்ததைவிட 1963ல், சராசரியாக, 2.4 சதவீதம் உயர்ந்திருந்து, இறக்குமதித் தொகுதிப் பொருட்களில் 6.0 சதவீத அதிகரிப்பையும், ஏற்றுமதித் தொகுதிப் பொருட்களில் 3.4 சதவீத அதிகரிப்பையும் பிரதிபலித்து, இதனுல் உள்நாட்டுத் தொகுதிப் பொருட்களில் 0.4 சதவீத வீழ்ச்சியை மேலதிகமாக ஈடு செய்தது. வருடமுடிவின் போது துறைமுகத்திலிருந்த நிலைமையின் சீர்கேடு, தட்டுப்பாடுகளை உண்டாக்கி அநேகமான பண்டங்களின் விலைகளை உயர்த்தியது.

அட்டவணை II இ-1ல் உள்ள பொருட்தொகுதிக் குறிகாட்டிகளை, 1962விருந்தவற்றுடன் ஒப்பிடுகையில், உணவுப் பொருட்தொகுதி, 2.1 சதவீதத்தாலும், உடைபொருட்தொகுதி 9.2 சதவீதத்தாலும், பலதரப்பட்ட பொருட்களின் உப-குறிகாட்டி, 1.4 சதவீதத்தாலும் உயர்ந்திருந்தன. ஆயினும், எரிபொருள், விளக்கின் குறிகாட்டி 2.5 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. வாடகைக்கான குறிகாட்டியில் மாற்றமொன்றும் பதியப்படவில்லை.

உணவுப் பொருட்களது குறிகாட்டியின் உயர்ச்சி, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட உணவுப்பொருட்களின் விலைகள் 1.4 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றுலும், இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரித்தமையினுலேயே, ஏற்பட்டது. முதற் கூறப்பட்டது, இறைச்சி, மீன், முட்டை, எலுமிச்சம்பழம் ஆகியனவற்றின் தாழ்ந்த சில்லறை விலைகள், காய்கறிகளின் உயர்ந்த விலைகளை மேலதிகமாக ஈடு செய்தமையினுல் ஏற்பட்டது. 1963ம் ஆண்டின் முடிவின் போது உண்டான காய்கறிகளின் விலை அதிகரிப்பானது; தீமையான விளைவுகளைக் கொண்ட புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி ஆகிய மாதங்களிற் பெய்த பருவத்திற்கொவ்வாத மழையினுற் காய்கறி பயிரிடுதல், பாதிக்கப்பட்டமையினுல், ஏற்பட்டது. இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட் தொகுதியின் விலைகளது உயர்ச்சியானது, கட்டிப்பால், மீன்கருவாடு, மாசிக்கருவாடு, வெங்காயம் ஆகியவற்றின் விலைகளது அதிகரிப்புகளினுலும், கோதுமை மாவினதும், சீனியினதும், விலைகளிலேற்பட்ட மாற்றங்களினுலும், உண்டாகியது. 1963ம் ஆண்டு, மாசி மாதம், வெள்ளைச்சீனியினது விலை, இருத்தலுக்கு 62 சதங்களிலிருந்து 67 சதங்களுக்கு அதிகரிக்கப்பட்டது. 1961ம் ஆண்டு, ஆடி மாதம், கோதுமை மாவினது விலை இருத்தலுக்கு 23 சதங்களிலிருந்து 28 சதங்களுக்கு அதிகரிக்கப்பட்டது. 1963ம் ஆண்டு ஆவணி மாதம், கோதுமை மாவினது விலை, முன்னர் இருந்த மட்டத்திற்குக் குறைக்கப்பட்டது. 1962ம் ஆண்டு தை மாதத்திலிருந்து கிடைக்காமலிருந்த சிவப்புச் சீனி, இருத்தலுக்கு 63 சதங்கள் கொண்ட விலையோடு, 1963ம் ஆண்டு கார்த்திகை மாதம், சந்தைக்கு விடப்பட்டது. ஏற்றுமதி உணவுப் பொருட்தொகுதி, அநேகமாகத் தெங்குப் பொருட்களினது ஏற்றுமதிக்கான கேள்வியினது அதிகரிப்பினுல், 3.4 சதவீதத்தால் உயர்ந்தது. இது உள்நாட்டு விலைகளின் உயர்ச்சியிற் பிரதிபலிக்கப்பட்டது. ஏற்றுமதி உணவுப் பொருட்தொகுதியில், கொழுப்புக்களும், எண்ணெய்களும்கூட, 1963ம் ஆண்டு உயர்ந்த விலைகளைப் பதிவு செய்தன.

உடைபொருட்தொகுதிக் குறிகாட்டியின் உயர்ச்சி, சென்ற இரு ஆண்டுகளினதும் தீர்வைகளின் அதிகரிப்புகள், ஆடைவகைகளின் இறக்குமதிகள் மேல் விதிக்கப்பட்ட மட்டுப்படுத்தல்கள் ஆகிய இரண்டினுலும், ஏற்பட்டது. எனினும், 1963ம் ஆண்டு ஆவணி மாதத்தில், குறைந்த விலையிலுள்ள சில ஆடைவகைகளின் மீதுள்ள தீர்வைகள் குறைக்கப்பட்டன.

பலதரப்பட்ட உப-தொகுதிக் குறிகாட்டியின் அதிகரிப்பு, முக்கியமாக, 1963ம் ஆண்டு, ஆவணிமாதம் கொண்டு வரப்பட்ட புகையிலையின் மீதான தீர்வையின் அதிகரிப்பால் உண்டானதாகும்.

சென்ற வருடத்துடன் ஒப்பிடுகையில், 1963ம் ஆண்டு, எரிபொருள் விளக்குத் தொகுதியில் 2.5 சதவீத வீழ்ச்சியை உண்டாக்குவதற்குப் பிரதான காரணங்களாவன, 1963ம் ஆண்டு, ஆவணி மாதம், மண்ணெண்ணெ மீதுள்ள தீர்வை குறைக்கப்பட்டமையும், விறகின் விலையில் ஏற்பட்ட வீழ்ச்சியுமாகும்.

எனினும், கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டி, முழுமையான பொருளாதாரத்திலுள்ள விலை மாற்றங்களை அளவிடுவதிற் போதுமானதாக இருப்பதில்லை என்பது கவனிக்கப்படவேண்டியதொன்றாகும். அது, கொழும்பிலுள்ள தொழிலாளர் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் நுகர்ச்சியிற்சேரும் விடயங்களுடன் மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. மானியம் வழங்கப்பட்டோ அல்லது கட்டுப்படுத்தப்பட்டோ உள்ள விடயங்களின் விலைகள், அல்லது கடுமையான இறக்குமதி மட்டுப்படுத்தல்களுக்கு உட்படாத விடயங்கள் ஆகியன, குறிகாட்டியின் ஓரளவு பெரிய முக்கியத்துவத்திற்கு வகைகூறுகின்றன. குறிகாட்டியில் இல்லாத விடயங்களின் விலைமாற்றங்கள் பற்றிய தரவுகள், தையல் மெஷின், குளிரேற்றிப்பெட்டிகள், பீங்கான் கலவகை முதலிய நீண்டகால உபயோகமுள்ள நுகர்ச்சிப் பொருட்களின் விலைகளும், மின்சார சாதனங்கள், ரயர்கள், ரியூப்கள், மோட்டார் வாகனங்களினது மாற்றுறுப்புகள், பலதிறப்பட்ட இயந்திரங்கள், அடிப்படை உலோகங்கள், கட்டட ஆக்கப்பொருட்கள் போன்ற விடயங்களின் விலைகளும், கணிசமான அளவு அதிகரிப்புக்களைக் காட்டியிருக்கின்றன என்பதைப், பிரதிபலிக்கின்றன. நீண்டகால உபயோகமுள்ள நுகர்ச்சிப் பொருட்களின் விலைகளினது அதிகரிப்பு, இறக்குமதி மட்டுப்படுத்தல்களினாலும், 1961, 1962, 1963 ஆகிய வருடங்களிற் புகுத்தப்பட்ட இறக்குமதித் தீர்வைகளினது அதிகரிப்புகளினாலும், தட்டுப்பாடுகளின் பயனால் ஏற்பட்ட லாபத்தின் அதிகரிப்புக்களினாலும், ஏற்பட்டது.

## கூலிகள்

1963ம் ஆண்டில் பெரும்பான்மையான தொழிலாளர்களின் கூலி விகிதங்களில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. சிலதுறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டன எனினும், அவை, வாழ்க்கைச் செலவில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு இணங்க அதிகரித்த துணைச் சம்பளங்களாகவே இருந்தன. எனினும், வருடமுடிவின் போது, வியாபாரத்தாபனங்களின் ஊழியர்களது கூலி விகிதங்கள் அதிகரிக்கக்கூடியதாகத் திருத்தியமைக்கப்பட்டு, நிலைபேறான கூலியின் இடத்துக்கு, அவர்களுக்கு, ஏற்றபடி அளவு முறையான கூலி கொடுக்கப்பட்டது. தொழிலாளர்களின் கூலிவிகிதங்களில் வருடாவருடம் ஏற்பட்ட மாற்றங்களை விளக்கும் குறிகாட்டிகள், ஆக அரசாங்க ஊழியர், அரசாங்கப் பாடசாலை ஆசிரியர் கூலிநிர்ணயசபை வாய்ந்த தொழில்களில் உள்ள தொழிலாளர் ஆகியோர் சம்பந்தப்பட்டவரையிலுமே, கிடைத்துள்ளன.

கடந்த நான்கு வருடகாலத்தில் அரசாங்க ஊழியர், அரசாங்கப் பாடசாலை ஆசிரியர், ஆகியோரினது கூலிவிகிதங்களிலும், மெய்க் கூலிவிகிதங்களிலும் ஏற்பட்ட மாற்றங்களைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது. இவ் ஊழியர்களின் கூலிவிகிதங்களில், 1963ம் ஆண்டின் போது மாற்றம் எதுவும் ஏற்படவில்லை.

## அட்டவணை II இ-3

### அரசாங்க ஊழியர்களுக்கான கூலிவிகிதக் குறிகாட்டி எண்கள்

(1952=100)

| காலம் | இலிகிதரும் தொழிற் பயிற்சி பெற்றோரும் | | சிறுசேவை ஊழியர் | | மத்திய அரசாங்க ஊழியர் (அ) | | அரசாங்க பாடசாலை ஆசிரியர் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கூலி | மெய்க் கூலி | கூலி | மெய்க் கூலி | கூலி | மெய்க் கூலி | கூலி | மெய்க் கூலி |
| 1960 | 122·3 | 118·2 | 130·4 | 126·0 | 126·7 | 122·4 | 117·4 | 113·4 |
| 1961 | 122·3 | 116·7 | 130·4 | 124·4 | 126·7 | 120·9 | 117·4 | 112·0 |
| 1962 | 122·3 | 115·0 | 130·4 | 122·6 | 126·7 | 119·2 | 117·4 | 110·4 |
| 1963 | 122·3 | 112·4 | 130·4 | 119·9 | 126·7 | 116·5 | 117·4 | 107·9 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

(அ) இலிகிதர், தொழிற்பயிற்சி பெற்றோர், சிறுசேவை ஊழியர் ஆகியோரை இணைத்துக் கணித்த குறிகாட்டி.

தனிப்பட்டோர் துறையிலுள்ள கூலிவிகிதங்களின் நடமாட்டங்கள் பற்றிக் கிடைக்கக்கூடிய விபரங்கள், கூலி நிர்ணயசபை அமைக்கப்பட்ட துறைகளில் உள்ள தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டவையாகவே மட்டும் உள்ளன. இக்கூலி நிர்ணயசபையின் கண்காணிப்பின் கீழ் உள்ள தொழிலாளர்களுள், 89.4 சதவீதமானோர் விவசாயத் தொழிலாளர்களாகும்.

கடந்த நான்கு வருடங்கட்குமான, கூலிநிர்ணய சபை வாய்ந்த தொழில்களில் உள்ள தொழிலாளரின் கூலிவிகிதங்களினதும், மெய்க்கூலிவிகிதங்களினதும் நடமாட்டங்களைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

## அட்டவணை II இ-4

### கூலி நிர்ணய சபையிலுள்ள தொழில்களில் உள்ள தொழிலாளர்களின் கீழ்மட்டக் கூலி விகிதக் குறிகாட்டிகள்

(1952=100)

| காலம் | விவசாயத் தொழிலாளர் | | கைத்தொழில் வர்த்தகத் தொழிலாளர் | | கூலி நிர்ணயசபைவாய்ந்த தொழில்களில் உள்ள சகல தொழிலாளர்களும் (அ) | |
|---|---|---|---|---|---|---|
| | கீழ்மட்டக் கூலி | மெய்க் கூலி | கீழ்மட்டக் கூலி | மெய்க் கூலி | கீழ்மட்டக் கூலி | மெய்க் கூலி |
| 1960 | 110·2 | 106·5 | 128·1 | 123·8 | 111·8 | 108·0 |
| 1961 | 110·7 | 105·6 | 128·4 | 122·5 | 112·3 | 107·2 |
| 1962 | 111·9 | 105·2 | 129·5 | 121·8 | 113·7 | 106·9 |
| 1963 | 113·3 | 104·2 | 130·9 | 120·3 | 115·2 | 105·9 |

மூலங்கள்: குடிசனமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை மகா வங்கி.

(அ) விவசாயத் தொழிலாளர்கள், கைத்தொழில், வர்த்தகத் தொழிலாளர்கள் ஆகியோரை இணைத்துக் கணித்த குறிகாட்டி.

1962ம் ஆண்டிலிருந்தவற்றைவிட 1963ம் ஆண்டில், விவசாயத் தொழிலாளர்களின் கூலிவிகிதங்கள், 1.3 சதவீதம் உயர்ந்தும், கைத் தொழில், வர்த்தகத் தொழிலாளர்களின் கூலிவிகிதங்கள், 1.1 சதவீதம் உயர்ந்தும் இருந்தன. கூலிவிகிதங்களின் உயர்ச்சி, வாழ்க்கைச் செலவுக் குறிகாட்டி உயர்ந்ததைத் தொடர்ந்து அவர்களது துணைச் சம்பளங்கள் அதிகரித்ததனுல் மட்டுமே உண்டாகியது.